வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: நாராயணசாமி

தேதி: 20.02.2025 நேரம்: மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

டெல்லி முதலமைச்சராக இன்று பதவியேற்றுள்ள திருமதி ரேகா குப்தாவிற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கான, பிரதமரின் இண்டர்ன்ஷிப் திட்டத்திற்கு, 2ஆம் கட்டமாக மீண்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப் பட்டுள்ளன.

நாட்டு மக்களின் ஆரோக்கியத்திற்கு அரசு மிகுந்த முன்னரிமை அளிப்பதாக, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மாஹேயில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்த, 18ஆவது காய்-கனி மற்றும் மலர்க் கண்காட்சி, வரும் 23ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

------------------------

*மோடி-டெல்லி முதலமைச்சர் 1 (15)*

டெல்லி முதலமைச்சராக இன்று பதவியேற்றுள்ள திருமதி ரேகா குப்தாவிற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். மாணவப் பருவத்தில் இருந்தே அரசியலில் ஈடுபட்டு, நகராட்சி நிர்வாகம், மாநில அளவிலான கட்சி நிர்வாகம் எனப் பல்வேறு நிலைகள் வழியாக, தற்போது சட்டமன்ற உறுப்பினராகவும், முதலமைச்சராகவும் உயர்ந்து இருப்பவர், ரேகா குப்தா என்று, சமூக ஊடகப் பதிவில் பிரதமர் கூறியுள்ளார். திருமதி ரேகா குப்தா தலைமையிலான புதிய அமைச்சரவை, ஆற்றல் மற்றும் அனுபவத்தின் அழகிய கலவையாகவே திகழ்வதாகவும், திருமதி ரேகா குப்தா, டெல்லியின் வளர்ச்சிக்கு, முழு ஆற்றலுடன் செயல்படுவார் என தாம் நம்புவதாகவும், பிரதமர் கூறியுள்ளார்.

முன்னதாக, டெல்லி ராம் லீலா மைதானத்தில் இன்று நடைபெற்ற பதவியேற்பு விழாவில், முதலமைச்சராக திருமதி ரேகா குப்தா பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு, டெல்லி துணை நிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா, பதவி பிரமாணமும், ரகசிய காப்பு உறுதிமொழியும் செய்து வைத்தார். திரு. பர்வேஷ் சிங், திரு. கபில் மிஸ்ரா உட்பட 6 கேபினட் அமைச்சர்களும், இவ்விழாவில் பதவியேற்றுக் கொண்டனர்.

*மோடி-டெல்லி முதலமைச்சர் 2 (7)*

பதவியேற்பு விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் மற்றும் இதர மத்திய அமைச்சர்களும், பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் துணை முதலமைச்சர்களும் கலந்து கொண்டனர். டெல்லியில், சுஷ்மா ஸ்வராஜ், ஷீலா தீக்ஷித், அதிஷி ஆகியோருக்கு அடுத்தபடியாக, 4ஆவது பெண் முதலமைச்சராக திருமதி ரேகா குப்தா பதவி ஏற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

*இண்டர்ன்ஷிப்* (14)

இளைஞர்களுக்கான, பிரதமரின் இண்டர்ன்ஷிப் திட்டத்திற்கு, 2ஆம் கட்டமாக மீண்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப் பட்டுள்ளன. முதல் சுற்றில், இண்டர்ன்ஷிப் வாய்ப்பிற்காக 6 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் விண்ணப்பித்த நிலையில், நடப்பு 2ஆம் சுற்றில், நாட்டின் முன்னணி நிறுவனங்களில் 1 லடசத்திற்கும் மேற்பட்ட இண்டர்ன்ஷிப் வாய்ப்புகள் இளைஞர்களுக்கு வழங்கப்பட உள்ளன. எரிசக்தி, எண்ணெய்-எரிவாயு, வங்கி சேவை, நிதி சேவை, போக்குவரத்து, விருந்தோம்பல், மோட்டார் வாகன உற்பத்தி மற்றும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள், இத்திட்டத்தின் கீழ், உதவித் தொகையுடன் கூடிய ஓராண்டு இண்டர்ன்ஷிப் வாய்ப்புகளை, இளைஞர்களுக்கு வழங்கி வருகின்றன. எந்தவொரு முழு நேர படிப்பு அல்லது வேலையிலும் இல்லாத, 21 முதல் 24 வயது வரையுள்ள இளைஞர்கள், இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். நடப்பு 2ஆம் சுற்றில், ஒவ்வொரு விண்ணப்பதாரரும், அதிகபட்சம் 3 நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

*தேர்தல் ஆணையர்* (6)

தலைமைத் தேர்தல் ஆணையராக நேற்று பொறுப்பேற்ற திரு. கியானேஷ் குமார், இன்று புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து பேசினார். இந்திய அரசியல் சாசனம், தேர்தல் சட்டங்கள், மற்றும், சட்ட விதிகளுக்கு ஏற்ப, தேர்தல் ஆணையம் எப்போதுமே, மக்கள் பக்கம் இருப்பதாக, நாட்டு மக்களுக்கான செய்தியில், புதிய தலைமைத் தேர்தல் ஆணையர் கூறியுள்ளார்.

------------------------

*தமிழ் சங்கமம் (5)*

வாரணாசியில், 3ஆம் ஆண்டு காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்றுள்ள தமிழகக் குழுவினர், கங்கை நதியில் புனித நீராடி, பழங்கால கோவில்களில் வழிபாடு நடத்தினர். ஆசிரியர் பிரிவு, மற்றும் மாணாக்கர் பிரிவின் கீழ், காசி தமிழ் சங்கமத்தில் பங்கேற்றுள்ள சிலர், தங்களின் அனுபவங்களை, எமது செய்தியாளரிடம் பகிர்ந்து கொண்டனர்......

(வாய்ஸ்)

------------------------

*ரங்கசாமி-வாழ்த்து* (7)

டெல்லி முதலமைச்சராக இன்று பதவியேற்றுள்ள திருமதி ரேகா குப்தாவிற்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். திருமதி ரேகா குப்தா, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் திறமையான வழிகாட்டுதலின் கீழ், வெற்றிகரமான நிர்வாகம் மூலம், டெல்லி வரலாற்றில் புதிய சாதனைப் படைக்க, சொந்த முறையிலும், புதுச்சேரி மக்கள் சார்பிலும், மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக, வாழ்த்துக் கடிதத்தில் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

------------------------

*ஜிதேந்திர சிங்* (14)

நாட்டு மக்களின் ஆரோக்கியத்திற்கு அரசு மிகுந்த முன்னுரிமை அளிப்பதாகவும், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, குறைந்த செலவுடன் கூடிய சிகிச்சை முறைகள் ஊக்குவிக்கப் படுவதாகவும், மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தில், பிரதமரின் சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கட்டப் பட்டுள்ள, ஸ்ரீ சித்திரைத் திருநாள் மருத்துவ அறிவியல் கழகத்தின் புதிய கட்டிடத்தை அவர் திறந்த வைத்து பேசினார். குறைந்த விலையில்மக்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கான வசதிகளில், கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் இடையில் வித்தியாசத்தை போக்குவதே, இத்திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார். மத்திய அமைச்சர் திரு. சுரேஷ் கோபி, கேரள சுகாதார அமைச்சர் திருமதி வீணா ஜார்ஜ், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சசி தரூர் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர். மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி நட்டாவின் , வீடியோ செய்தியும் விழாவில் இடம்பெற்றது.

------------------------

*பைலட் உரிமம்* (9)

விமான ஓட்டிகளுக்கு, **மின்னணு பணியாளர்** உரிமம் வழங்கும் நடைமுறைகளை, மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு. ராம் மோகன் நாயுடு, புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார். இது, நாட்டின் டிஜிட்டல் புரட்சிக்கு இன்னொரு உதாரணம் என்றும். உலகிலேயே இத்தகைய **இபிஎல்** உரிமங்களை விமான ஓட்டிகளுக்கு வழங்கும் 2ஆவது நாடாக இந்தியா மேம்பட்டுள்ளதாகவும், அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறினார். விமான ஓட்டிகளுக்கான, புதிய மின்னணு உரிமங்களால், உரிமம் வழங்கும் நடைமுறைகளும், புதுப்பிக்கும் நடைமுறைகளும் எளிமையாகும் என, அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

------------------------

*ரங்கசாமி-மாஹே* (10)

மாஹேயில் நேற்று மாலை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்த, 18ஆவது காய்-கனி மற்றும் மலர்க் கண்காட்சி, வரும் 23ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில், வண்ண மலர்கள், மற்றும் காய்-கனிகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட பல்வேறு காட்சிப் பொருட்களும், கொய் மலர்கள், தொட்டி வளர்ப்பு மலர்ச் செடிகள், மற்றும், வீரிய காய்-கனி ரகங்களும், பொது மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன. முன்னணி தோட்டக்கலை நர்சரிகள், இக்கண்காட்சியில் அரங்குகளை அமைத்து, விதை, உரங்கள், செடிகள், பழக்கன்றுகள், மற்றும், தொட்டி வகைகளை விற்பனைக்கு வைத்துள்ளன.

பார்வையாளர்களை கவரும் வகையில், நீருற்றுகளும் அமைக்கப் பட்டுள்ளன.

------------------------

*புதுச்சேரி □ாடக விழா* (7)

புதுச்சேரியில் இன்று முதல், அடுத்த வியாழன் கிழமை வரை, 8 நாட்களுக்கு நடைபெற உள்ள, நாடகத் தந்தை தவத்திரு. சங்கரதாஸ் சுவாமிகள் நாடக விழாவை, கலை-பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பி.ஆர்.என். திருமுருகன், முருங்கப்பாக்கம் திரௌபதி அம்மன் கோவில் திடலில், இன்று மாலை தொடக்கி வைக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, கலை-பண்பாட்டுத் துறை இயக்குநர் திரு. நெடுஞ்செழியன் உள்ளிட்டோர், தொடக்க விழாவில் பங்கேற்கிறார்கள்.

------------------------

*பாதுகாப்பு – ரேடியோ* (13)

கடலோரக் காவல் படையின் பயன்பாட்டிற்காக, மென்பொருள் அடிப்படையிலான 149 எஸ்டிஆர் ரேடியோக்களை, மொத்தம் ஆயிரத்து 220 கோடி ரூபாய் செலவில் வாங்க, பாதுகாப்பு அமைச்சகம், பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. கடல்சார் சட்டங்களின் அமலாக்கத்தையும், கடலோரக் காவல் படையினரின் தேடுதல் மற்றும் மீட்புப் பணிகளையும், மீன்வளப் பாதுகாப்பு மற்றும் கடல்சார் சுற்றுச் சூழல் பாதுகாப்பையும், வலுப்படுத்துவதாக, இந்த நவீன சாதனங்கள் அமையும் என, பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடலோரக் காவல் படையினர், உயர்வேக டேட்டா இணைப்பு மூலம், நம்பகமான, பாதுகாப்பான முறையில் தகவல்களை பகிர்ந்து கொள்ளவும், கடல் பரப்பில் எங்கே இருக்கிறோம் என்பதை உடனுக்குடன் தெரிந்து கொண்டு, ஒருங்கிணைப்பான முறையில் செயல்படவும், இதனால் ஏதுவாகும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

*எல்லைக் காவல்* (12)

எல்லைக் காவல் பணிகளை ஒருங்கிணைப்பாக மேற்கொள்வது தொடர்பாக, இந்தியா-வங்கதேச எல்லைக் காவல் படைகளுக்கு இடையே,

தலைமை இயக்குநர்கள் நிலையில், புதுடெல்லியில் நடைபெற்ற 55ஆவது கூட்டம் இன்று முடிவடைந்தது. எல்லையின் குறுக்கே, ஊடுருவல், கடத்தல், மற்றும், இதர குற்றங்களை தடுப்பது குறித்தும், எல்லையில் வேலி அமைப்பது குறித்தும், இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. எல்லையில், கண்காணிப்புப் பணிகளையும், எல்லைப்புற கிராமங்களில் மக்களுக்கான விழிப்புணர்வு பணிகளையும் கூட்டாக மேற்கொள்ள, இருநாட்டு எல்லைக் காவல் படைகளின் தலைமை இயக்குநர்கள் ஒப்புக் கொண்டனர். இந்திய எல்லைக் காவல் படையினர், எல்லைக்கு அப்பால் இருந்து, வங்கதேச விஷமிகளால் தாக்கப்படும் சம்பவங்களை குறைப்பதிலும் ஒருங்கிணைந்து செயல்பட, இருநாட்டு எல்லைக் காவல் படைகளும் இணங்கி உள்ளன.

------------------------

*கிரிக்கெட் (6)*

ஐசிசி சேம்பியன்ஸ் கோப்பைக்கான கிரிக்கெட் தொடரில், இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே, இன்று துபாயில் நடைபெறும் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி, 49.4 ஓவர்களில், 228 ரன்னுக்கு ஆட்டம் இழந்து, இந்தியாவிற்கு, 229 ரன் என்னும் வெற்றி இலக்கை நிர்ணயித்துள்ளது. இத்தொடரில், ரசிகர்களால் மிகவும் எதிர்பார்க்கப்படும் இந்தியா-பாகிஸ்தான் போட்டி, வரும் 23ஆம் தேதி நடைபெறும்.

------------------------

*ஆவணக் காப்பகம் (12)*

சர்வதேச ஆவணக் காப்பகங்கள் சபையின், தெற்கு மற்றும் மேற்காசியப் பிராந்தியக் கிளைக் கூட்டத்தை, இன்று புதுடெல்லியில், மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தொடக்கி வைக்கிறார். இந்தியாவில் இக்கூட்டம் நடைபெறுவது இது 2ஆவது முறையாகும் என்று அவர் கூறினார். இந்த 2 நாள் கூட்டத்தில் பங்கேற்றுள்ள நாடுகள், தங்களின் ஆவணக் காப்பகங்கள் மூலம், பொதுப் பாரம்பரியங்கள், மற்றும், மரபுகளை பரிமாறிக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். இந்தியாவில் ஆவணக் காப்பகங்களை டிஜிட்டல் மயமாக்க, அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இதர நாடுகளுக்கும் இது, உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார். இலங்கை, வங்கதேசம், நேபாள், பூட்டான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த

ஆவணக் காப்பகங்களின் பிரதிநிதிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

டெல்லி முதலமைச்சராக இன்று பதவியேற்றுள்ள திருமதி ரேகா குப்தாவிற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கான, பிரதமரின் இண்டர்ன்ஷிப் திட்டத்திற்கு, 2ஆம் கட்டமாக மீண்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப் பட்டுள்ளன.

நாட்டு மக்களின் ஆரோக்கியத்திற்கு அரசு மிகுந்த முன்னுரிமை அளிப்பதாக, மத்திய அறிவியல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மாஹேயில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி வைத்த, 18ஆவது காய்-கனி மற்றும் மலர்க் கண்காட்சி, வரும் 23ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**